புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுர் ஆண்டு 2056 • ஜுலை 03, 2025 • புரட்சி 25 • முழக்கம் 29 • விலை ரூ.6.00

## கண்டா வரச்சொல்லுங்க!

சர்வதேச விண்வெளி நிலையமாம்! அங்கே மனிதர்கள் போகிறார்களாம்! நமது பகவான்களும் தேவதைகளும் வாசம் செய்யும் புண்ணிய ஆகாயம் அது.

"நாம் ஆண்டுதோறும் தர்ப்பைப்புல் வழியாக தர்ப்பணம் செய்து அரிசி, பருப்பு போன்ற பதார்த்தங்களை பிதுர்களுக்கு பார்சல் செய்கிறோம். அவர்களும் அதை சாப்பிட்டு சகல சௌபாக்கியத்துடன் வாழும் போது இந்த விண்வெளி ஆராய்ச்சியாளர்களுக்கு ஏன் இந்த வீண் வேலை? இது ஆச்சாரத்துக்கு பங்கம் விளைச்சுடும்" இப்படி வேத புரோகிதர்கள் நியாயமாக கேட்டிருக்க வேண்டும்; ஆனால் வாயைத் திறக்கவில்லை. சுபான்சு சுக்லா என்பவர் இப்போது சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மய்யத்துக்கு போய்விட்டார்! அங்கே ஏற்கெனவே பல விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்கிறார்கள்.

"சூரிய மண்டலத்தில் சூரிய பகவான் ஏழு குதிரைகளைப் பூட்டிய ஒற்றைச் சக்கரம் உள்ள ரதத்திலிருந்து கொண்டு ஒவ்வொரு நாளும் உலகத்துக்கு வெளிச்சத்தை தந்து கொண்டு வந்து வருகிறான். 'பிராமண' குடும்பத்துக்கு அவன் தான் தெய்வம். வேத ஆகம மந்திரங்களுக்கு அதி தேவதை" என்று நம் முன்னோர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். இதற்குப் பிறகும் ஆராய்ச்சிகள் தேவைதானா என்று ஆத்திக சிகாமணிகளோ, சங்கராச்சாரிகளோ, பார்ப்பன சங்கங்களோ, ஆடிட்டர் குருமூர்த்திகளோ கேள்வி கேட்கவில்லை. வாயை மூடிக்கொண்டு அன்றாடம் சூரிய நமஸ்காரம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

"எங்களின் 'ஆகாய கங்கை' தான் உங்களுக்கு ஆராய்ச்சிக்குக் கிடைத்தா? கிறிஸ்தவக் கடவுள், முஸ்லிம் கடவுள் உங்களுக்கு கிடைக்கவில்லையா" என்று இந்து முன்னணி அர்ஜுன் சம்பத்தும் கேட்கவில்லை. சூரியனை மட்டும் அல்ல சந்திரனையும் ஆராய்கிறார்களாம். சந்திரன் யார் தெரியுமா?

"வானலோகத்தில் பரணிதேவி, பசுபதிதேவி, ரோகிணி தேவி என்று 27 பத்தினிமார்களை சுபமுகூர்த்தம் செய்து வாழ்கிறான். ஆனாலும் ரோகிணி தேவியைத் தவிர எந்த தேவியையும் அவன் விரும்பவில்லை. தன்னை கவனிக்கவில்லை என்று மற்ற தேவிகளுக்கு கோபம். கோபம் கொண்ட தேவிகள் "உன் அழகு ஒவ்வொரு நாளும் குறைந்து கொண்டே போவது என்று அவர்கள் சாபம் விட்டனர்." அந்த சாபம் தேய்பிறையாக சந்திரன் உடைய அழகைக் குறைத்துக் கொண்டே வந்தது. பிறகு சிவபெருமான் தலையிட்டு முழு அழகையும் மீட்டுத் தந்தார். இப்படி சந்திரனுக்காக நாங்கள் புராணங்களை எழுதி வைத்திருக்கிறோம். அந்த சந்திரனையா நீங்கள் ஆராய்ச்சி செய்கிறீர்கள்? அங்கே போய் மண் எடுத்து வருகிறீர்கள்? சூரியனும் சந்திரனும் சேர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் இந்த பூலோகம் என்ன ஆவது என்பதை பற்றி சிந்தித்தீர்களா? என்று எந்த சங்கிகளும் பக்தி 'பரவசத்தோடு' கேட்கவில்லை.

சரி அது போகட்டும்! குறைந்தபட்சம் இந்த ஆராய்ச்சிக்கு தடை போடுங்கள் என்று வழக்கமாக மனு போடும் வழக்கறிஞர்களும் நீதிமன்றத்திற்கு போகவில்லை. அப்படி போயிருந்தால் மதுரை நீதிமன்றம் தடை போட வாய்ப்பு கிடைத்திருக்கும். அதையும் நழுவவிட்டார்கள்.

சங்கிகளும் இப்படி வாய் மூடிக் கிடந்தாலும் கூட நம்மால் வாய் மூடி சும்மா இருக்க முடியாது. நாம் சில கேள்விகளை விண்வெளியில் இருக்கும் சுக்லாவிடம் கேட்க வேண்டியிருக்கிறது:

- அங்கே விண்வெளியில் சொர்க்கம் நரகம் இருக்கிறதா?
- சொர்க்கவாசிகளுக்கு இங்கிருந்து பிராமண உத்தமர்கள் தர்ப்பைப் புல் வழியாக வேத மந்திரங்களை ஓதி அனுப்பி வைக்கும் உணவுகள் 'சுகி' 'டென்சோவைப்' போல ஒழுங்காக டெலிவரி செய்யப்படுகிறதா?
- சிவன் விஷ்ணு நோயின்றி நலமுடன் இருக்கிறார்களா?
- நட்சத்திரங்கள் எல்லாம் பூமியில் வாழும் மனிதர்களின் சோதிடங்கள் தலைவிதிகளை நிர்ணயிக்கும் வேலைகளை முறையாக ஒழுங்காக செய்து கொண்டு வருகிறார்களா?
- நரகத்தில் எவராவது இருக்கிறார்களா?
- சித்தர புத்திரன் கணக்குப் புத்தகத்தை ஒழுங்காக எழுதுகிறானா?
- எருமை மாடு நலமா?
- வேத மந்திரங்கள் சாட்டிலைட் உதவி இன்றி அதற்கு உரிய சக்தியோடு வந்து சேருகிறதா?
- கல்லைக் கடவுளாக்கும் மந்திரங்களுக்கு ஒப்புதல் தருகிறீர்களா?

சிலை திருட்டு, உண்டியல் திருட்டு மற்றும் குடித்துவிட்டு குத்தாட்டம் போடும் வேதக்காரர்களையும் சொர்க்கத்துக்கு தான் அனுப்புறீர்களா?...

இப்படி ஏராளமான கேள்விகள் கேட்பதற்கு இருக்கிறது. இந்த விடைகளுக்காக பூலோகத்தில், பூதேவர்களும், முருகன் கூட்டணியும் காத்திருக்கிறார்கள்...

– கோடங்குடி மாரிமுத்து!

## விநாயகன் 'அரசியல்' ஊர்வலம்

# கழகத் தலைவர் அறிக்கை

**விரைவில் வர இருக்கும் விநாயகன் 'அரசியல்' ஊர்வலத்தில் விதிமீறல்களைத் தடுப்பதற்கான முயற்சிகளில் கழகத் தோழர்கள் உடனடியாக ஈடுபட வேண்டும் என்று வலியுறுத்தி கழகத் தலைவர் கொளத்தூர் மணி விடுத்துள்ள அறிக்கை.**

அன்பார்ந்த தோழர்களே!

முருகன் முகமூடியோடு தமிழ்நாட்டு மக்களின் மனங்களைக் கொள்ளை அடிக்க சிலர் எடுத்த முயற்சி, பல வகைகளிலும், பல தரப்பிலும் நிகழ்ந்த அசைவுகள், நகர்வுகள், எச்சரிக்கை மணிகள் என விழிப்போடு இருந்து நா(வீ)ட்டாரால் தோற்கடிக்கப்பட்டு விட்டது.

ஆனால், 'மயானக் கொள்ளை' என்பதைப் போல மக்களையும் உடன் அழைத்துக் கொண்டு, பறைகள் முழங்க, பட்டப்பகலில், ஒலிபெருக்கிகள் அலற ஆண்டுதோறும் நடக்கும் அடுத்த 'மனங்கள் கொள்ளை' எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 27ஆம் நாள் பிள்ளையார் சதுர்த்தி என்ற பெயரில் நடக்க உள்ளது. மாசுக்கட்டுப்பாடு வாரியத்தால் தடை செய்யப்பட்ட பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ் விநாயகர்களை, இரசாயன சாயப் பூச்சோடு இப்போதே ஜோராக உற்பத்தி செய்யத் தொடங்கிவிட்டார்கள்.



மூன்று அங்குல விட்டமுள்ள கொடிக்கம்பத்தால், அரசு நிலங்கள், பொது சாலைகள் அநியாயமாய் ஆக்கிரமிக்கப்பட்டு, போக்குவரத்து ஸ்தம்பித்துப் போய்விடலாம் என்று உயர்நீதிமன்றமே சமூக அக்கறையோடு முழு வீச்சில் மக்களையும், அரசு நிலங்களையும் காப்பாற்றும் முயற்சியில் கொடிக்கம்பங்களை அகற்றிக் கொண்டிருக்கும் இந்த காலகட்டத்தில், பாதி சாலைகளை ஆக்கிரமித்து பிள்ளையார் சிலைகளை வைக்கவும், இரவு 10 மணி 10 நிமிடம் வரை பொதுக்கூட்டம் நடந்ததால் மக்களின் தூக்கம் கெடுத்த குற்றத்திற்காக அரசியல் கட்சிகள் மீது வழக்குகள் போடும் காவல்துறையின் கண் முன்னே அல்லது காது முன்னே இரவு முழுவதும் ஒலிபெருக்கிகள் அலறிக் கொண்டிருக்கப் போகின்றன.

***மக்கள் உரிமைகளைக் காக்கவோ, மீட்கவோ 50 பேர் ஊர்வலம் போவதற்கு உயர்நீதிமன்றம் வரை போய் குறைந்தது 50 நிபந்தனைகளோடு அனுமதி பெறும் நிலையில், எந்த அனுமதியும் பெறாமல் ஆபாச நடனம் ஆடிக்கொண்டு ஊர்வலங்கள் நடக்க உள்ளன.***

ஊர்வலத்தில் இரண்டு இரண்டு பேராக சாலையின் இடது ஓரத்தில் 20 வரிசைகள் கடந்தவுடன் பொதுமக்கள் சாலைகளைக் கடக்க வசதியாக 10 அடி இடைவெளி விட்டு அடுத்த 20 பேர்கள் வரவேண்டும் என்றும், ஆராய்ச்சிப் பட்டங்கள் பல பெற்ற ஜோசியக்காரர்கள் 10 மணி 11 நிமிடத்தில் இருந்து 10 மணி 53 நிமிடங்களுக்குள் இந்த சடங்கு நடந்து முடிந்தாகவேண்டும் என கறாராக முகூர்த்த நேரம் குறித்துத் தருவது போல, நீதிபதிகள் குறிப்பிட்ட நேரத்துக்குள் ஊர்வலம் தொடங்கி, குறித்துக் கொடுத்த நேரத்துக்குள் ஊர்வலம் முடிந்தாக வேண்டும் என்ற நிபந்தனைகளும் இல்லாமல் அல்லது மதிக்காமல் சட்டத்தைக் காக்க அல்லும் பகலும் அயராது உழைக்கும் காவல்துறையினர் தொந்தி விநாயகருக்கு (காவல்துறையினரின் தொந்தி என்று தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது) கொடுக்கும் பாதுகாப்போடு முழு சாலையையும் அடைத்துக் கொண்டு மணி கணக்கில் போக்குவரத்தை ஸ்தம்பிக்க செய்யப் போகிறார்கள்.

முருக பக்தர்கள் நடத்தும் மாநாடு என 'இந்து முன்னணி மாநாடு' நடந்ததையும், அரசியல் பேசக்கூடாது என உயர் நீதிமன்றம் நிபந்தனை விதித்திருந்தும் திராவிட இயக்கத்தை ஒழிக்கவும், திராவிட இயக்கத் தலைவர்களை விமர்சித்தும் ஆவணப்படங்கள் ஒளிபரப்பினதும் நம் அனைவருக்கும் தெரியும். அதுபோலவே பிள்ளையார் ஊர்வலத்தையும் சங்கப் பரிவாரங்கள் பொதுக் கோயில்களில் தங்கள் கொடிகளோடு பிள்ளையார் சிலைகளை வைத்தும், ஒவ்வொரு மதவெறி இந்து அமைப்புகளும் தங்கள் அமைப்பின் பெயராலேயே, தங்களுக்கென்று ஒரு நாளினை ஒதுக்கப்பெற்று அது மதவிழா என்பதை மறக்கச் செய்து தங்கள் தங்கள் அமைப்பின் கொள்கைப் பரப்பு ஊர்வலமாக மாற்றி விடுகின்றனர்.

மந்திரிகளின் ஊழல் வழக்குத் தள்ளுபடி செய்தியைப் படித்தவுடன் தாமாக முன்வந்து (Suo moto) வழக்கை நடத்தும் அளவுக்கான நேர்மையான நீதிபதிகள் யாரும் நிபந்தனை மீறல் குறித்து தாமாக முன்வந்து வழக்கு எதையும் பதிந்ததாகத் தெரியவுமில்லை; கேள்விப்படவுமில்லை. அவ்வாறாக கட்சிக் கொடிகள் உடனும் கட்சிப் பதாகைகளுடனும், அரசியல் முழக்கங்களையும் எழுப்பிக் கொண்டும் செல்லும் பிள்ளையார் ஊர்வலங்களை தொலைக்காட்சியில் பார்க்கும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் யாரும் தாமாக முன்வந்து வழக்கு பதிவார்களா என்பதும் நமக்குத் தெரியாது.

அவ்வாறேதான் பெயர் மட்டும்தான் பிள்ளையார் ஊர்வலம்; ஆனால் நடப்பதோ இந்து முன்னணி, இந்து மக்கள் கட்சி, விஷ்வ ஹிந்து பரிஷத், பாரத இந்து மகா சபா என சமஸ்கர நாமங்களுடன் (ஆயிரம் பெயர்களுடன்) கட்சி ஊர்வலங்களுக்கு, கட்சிகள் பெயராலேயே, நாட்கள் பிரித்துக் கொடுத்தும்தான் காவல்துறை அனுமதியும் வழங்கி வருகிறது.

ஏனெனில் எச்சில் இலை வழக்கில் அறநிலையத் துறையை எதிர்மனுதாரராக சேர்த்து விசாரிக்காததால் இரு நீதிபதிகளடங்கிய ஆயம் வழங்கியத் தீர்ப்பை மாற்றியும் உச்ச நீதிமன்றத்தின் இடைக்காலத் தடையைப் பற்றிய கவலை இல்லாமல், எச்சில் இலையில் உருளலாம் என்ற தீர்ப்பை வழங்கி நீதிமன்ற ஒழுங்குகளை கறாராகப் பின்பற்றுவோர் நமக்கு நீதிபதிகளாக வாய்த்திருக்கிறார்கள். தன் 'கட்சி'க்காரருக்காக நீதிமன்ற ஆளுகை எல்லையைத் தாண்டிய மனுவைக் கூட, தேவையான எதிர்தரப்பினரைச் சேர்க்காமலும், அவர்கள் கருத்தைக் கேட்காமலும் 'தலை போகிற' ஆபத்துக் கருதி விடுமுறை காலத்திலும் தாமதம் இன்றி வழக்கை விரைந்து நடத்தி, உச்சநீதிமன்றத் தீர்ப்பே ஆனாலும் (நெற்றிக் கண்ணைத் திறப்பினும்) தடைவிதித்து நீதி வழங்கும் 'கொள்கை' உறுதி கொண்ட நீதிபதிகளும் இருக்கிறார்கள்.

அது போலவே பள்ளிக்கூடங்களில் கையில் கட்டும் வண்ணக் கயிறுகள் கூட ஜாதிய மோதலுக்கும் மத மோதலுக்கும் வழிவகுக்கும் என்பதால் கையில் வண்ண கயிறுகளோடு மாணவர்களை அனுமதிக்கக் கூடாது என அரசு நியமித்த ஆணையம் பரிந்துரைக்கும் நிலையில், தனது மதம் எது? மதத்தில் தமது பிரிவு எது? என்பதை குல்லா அணிந்தால் தெரியவரும் என்பதால் அதனைத் தவிர்த்து விட்டும், சிலுவையை வெளியில் காட்டி அணிந்தால் மதச்சார்பு தெரிந்துவிடும் என்பதால் சட்டைக்குள் மறைத்து வரும் நீதி பதிகளும் உண்டு; தைப் பொங்கலுக்காக மார்கழி இறுதியில் சுவருக்கு சுண்ணாம்படிப்பதைப் போல 'நீறில்லா நெற்றி பாழ்' எனும் பழம் நெறியைப் பின்பற்றி திருநீற்றுப் பூச்சோடும், நீதிமன்றம் அகற்றச் சொல்லும் கொடிக்கம்பத்தைப் போல் நடு நெற்றியில் சிவப்பு கம்பத்தை நட்டுக் கொண்டிருக்கும் நீதிபதிகளும் உண்டு.

சனாதன தர்மத்தை இழித்துப் பேசியதால், அமைச்சரின், நாடாளுமன்ற உறுப்பினரின் தகுதி நீக்க வழக்கில் இவ்வழக்கில் தகுதி நீக்கத்திற்கான விதிகள் ஏதும் இல்லை எனக் கூறி ஐந்து பக்கங்களில் தீர்ப்பளித்தாலும் சனாதான தர்மம் குறித்து குப்புசாமி சாஸ்திரி கூட்டத்தாரிடம் விளக்கம் பெற்று மக்கள் மீதுள்ள அக்கறையால் அவர்களுக்கு விளக்க (குழப்ப) வேண்டும் என்ற பேராவலோடு ஒரு நூறு பக்கங்களைத் தீர்ப்பில் சேர்த்து தெளிவுபடுத்தும் ஆர்வம் மிக்க நீதிபதிகளும் உண்டு. விதிமீறல் நடந்தாலும் உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி இந்த வகையறாக்களிடம் வழக்கு சென்றால் என்ன தீர்ப்பு வருமோ என்ற பதற்றம் நமக்கும் உண்டு.

**– தொடர்ச்சி 4வது பக்கம்**

## தலையங்கம்

# ஆகமக்காரர்களின் குத்தாட்டம்

ஆகமக் கோயிலில் பார்ப்பனர்கள் மட்டுமே அர்ச்சகராக முடியும். பார்ப்பனர் அல்லாதார் அர்ச்சகராக முடியாது என்ற ‘இன ஒதுக்கல்’ சட்டப்படியே நிலை நிறுத்தப்பட்டுள்ளது மிகப்பெரும் அவமானம்!

அரசியல் சட்டம் தீண்டாமையை தண்டனைக்குரிய குற்றம் என்று கூறுகிறது. ஆனால் இந்து மதம் தீண்டாமையை ஆகமங்களின் பெயரில் புனிதமாக்குகிறது. அரசியல் சட்டம் வழங்கியுள்ள மதச் சுதந்திர உரிமையை தீண்டாமைக்கு ஆதரவாக முறைகேடாக பயன்படுத்துவதற்கு நீதிமன்றங்களும் துணை போகின்றன என்பதுதான் பேரவலம்.

‘பிராமணர்கள்’ மட்டுமே கோயிலுக்குள் நுழைய முடியும் என்ற தீண்டாமை ஒரு காலத்தில் இருந்தது; சாஸ்த்திரமும் அப்படித்தான் கூறியது என்பதை நாம் சுட்டிக் காட்ட வேண்டும். ஆலயப்பிரவேச உரிமை என்ற பெயரில் போராட்டங்கள் நடந்தன. சுயமரியாதை இயக்கம் முதலில் தொடங்கியது. பிறகு காந்தியும் காங்கிரஸும் இந்த போராட்டங்களை நடத்தியது. ஆகம விதிகளைத் திருத்தித்தான் 1959-ஆம் ஆண்டு அனைத்து இந்துக்களும் கோயிலுக்குள் நுழையலாம் என்ற சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால் கர்ப்பகிரகத்துக்குள் இப்போதும் பார்ப்பனர் அல்லாதவர்களால் அர்ச்சகர் முடியாது என்பது மட்டுமல்ல ‘சூத்திரர்’ என்று இழிவுபடுத்தி அர்ச்சகர் உரிமையை மறுக்கிறார்கள்.

ஆகம கோவில்களில் அர்ச்சகர்களாக இருப்பவர்களுக்கான உடல் தகுதிகள் ஆகமங்களில் வரையறுக்கப்பட்டுள்ளன. அர்ச்சகர்கள் பல் துலக்கக் கூடாது, வேட்டி துண்டுகளைத் துவைக்க கூடாது, மீசை, தாடி இருக்கக் கூடாது, தொப்பை கூடாது, மனைவி உயிருடன் இருக்க வேண்டும், இறந்துவிட்டால் பூஜை செய்யக்கூடாது, மாமிசம் சாப்பிடக்கூடாது, கடல் தாண்டி போகக்கூடாது என்று ஆகம விதிகள் கூறுகின்றன. பல் துலக்காமலும் வேட்டி, துண்டுகளைத் துவைக்கமாலும் இருக்கும் அர்ச்சகர்கள்தான் ‘தீட்டுப்படாத’ தூய்மையானவர்களா? பார்ப்பன வேத பண்டிதர்கள் இப்படித்தான் வாழ்கிறார்களா?

ஸ்ரிவில்லிபுத்தூர் மாரியம்மன் கோயில் குடமுழுக்குக்காக முகூர்த்தக் கால் நடும் சடங்குக்கு வந்த இளம் அர்ச்சகர்கள் நிகழ்ச்சி வெற்றிகரமாக நடந்து முடிந்ததை ‘பார்ட்டி’ வைத்து கொண்டாடி இருக்கிறார்கள்.

அர்ச்சகர் ஒருவர் இல்லத்தில் அர்ச்சகர்களுக்கான புனித உடைகளோடு மது அருந்தி, குத்தாட்டம் போட்டு இருக்கிறார்கள். ஊடகங்களில் இந்த காட்சிகள் வெளிவந்திருக்கின்றன. சங் பரிவாரங்கள் உண்மைக்கு மாறான கருத்துக்களை பரப்பினார்கள். இவர்கள் தமிழ்நாடு அரசு நடத்திய அனைத்து ஜாதியினர் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெற்றவர்கள் என்று ஆதாரமற்ற குற்றச்சாட்டை அள்ளி வீசினார்கள்.

அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் வா.ரங்கநாதன் அதை உடனடியாக மறுத்துள்ளார். அறநிலையத் துறை கைது செய்துள்ள ஆறு பேரில் 5 பேர் பார்ப்பனர், ஒருவர் பார்ப்பனரல்லாத சைவப் பிள்ளை என்ற ஜாதியைச் சேர்ந்தவர். தமிழ்நாடு அரசால் நியமிக்கப்பட்ட 28 பார்ப்பனர் அல்லாத அர்ச்சகரின் பட்டியலையும் சங்கம் வெளியிட்டுள்ளது. இதில் குத்தாட்டம் போட்டு கைதானவர்களின் பெயர்கள் இடம் பெறவில்லை.

பார்ப்பன அர்ச்சகர் ஒருவர் அளித்த பேட்டியில் இந்த குத்தாட்டம் இப்போது நடந்தது அல்ல. ஏழு ஆண்டுகளுக்கு முன் நடந்தது; பொய்யாக அதை பரப்புகிறார்கள் என்று பேட்டியளித்துள்ளார். இதிலிருந்து இவர்கள் அரசு நடத்திய பயிற்சியில் படித்தவர்கள் அல்ல என்ற உண்மை வெளியாகிவிட்டது. ஆனால் குத்தாட்டம் நடந்தது உண்மை என்பதும் அம்பலமாகியுள்ள்து.

திமுக ஆட்சிக்கு வந்த 100வது நாளில்தான் இத்திட்டத்தையே முதல்வர் அறிமுகப்படுத்தினார். ஏழு ஆண்டுகளுக்கு முன் அர்ச்சகராக இருந்தவர்கள் ‘பிராமண குல’ வழியில் வேத பாடசாலையில் படித்து வந்தவர்கள் தான். உண்மையில் கடவுள் கருவறையில் பூஜை செய்யும் அர்ச்சகர்களுக்கு கடவுள் சக்தி என்று ஒன்று இல்லை என்பது நன்றாகவே தெரியும். பாமர மக்களைப் போல் அவர்களுக்கு கடவுள் பயம் இருக்காது.

காஞ்சிபுரம் கோயில் கருவறையில் கருவறையை படுக்கை அறையாக மாற்றிய தேவநாதன் என்ற அர்ச்சகர் கதை ஊர் அறிந்த ஒன்று! தில்லை நடராசன் கோயிலை தீட்சதர்கள் நட்சத்திர விடுதிகளாக மாற்றி அமைத்து அதற்காக கைதாகியும் உள்ளனர். குழந்தைத் திருமணங்களை ஆதரிப்பவர்கள். இப்போதும் தங்கள் குடும்பங்களில் நடத்தி வருகிறார்கள். தமிழ்நாடு ஆளுநர் அதை நியாயப்படுத்தி பேசுகிறார். திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் கோயிலில் ஏராளமான முறைகேடுகள் நடப்பதாக புகார்கள் வந்தன. நீதிமன்றங்களில் வழக்கு வந்தது உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று நீதிமன்றம் காவல்துறைக்கும் அறநிலையத்துறைக்கும் உத்தரவிட்டது.

கருவறைக்குள் பூசைக்கு செல்லும் ஆகம வேதியர்கள் பெரிய பைகள், அலைபேசிகளை கொண்டு செல்கிறார்கள். இந்த ஆகம மீறல்களை அறநிலையத்துறை தடை செய்தது என்று கோயில் உதவி ஆணையர் ரமணி காந்தன் கூறியுள்ளார்.

இதே கோயிலில் கருவறைக்கு முன்பாக இருக்கும் அர்த்தமண்டபத்தில் கண்காணிப்பு கேமராக்களை நிறுவ அறநிலையத்துறை நீதிமன்ற உத்தரவின்படி முடிவு செய்தது கருவறைக்குள் என்ன நடக்கிறது என்பதை இந்த கேமராக்கள் கண்காணிக்கும்.

இதற்கு ஆகம பண்டிதர்கள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் இறங்கினார்கள் கர்ப்பகிரகம் தங்களின் ‘பிராமண’ மேலாதிக்கத்தை பாதுகாப்பதோடு தங்களது ஒழுக்கக்கேடுகளையும் பாதுகாக்கும் இடம் என்பதை தவிர இந்த போராட்டத்தின் நோக்கம் வேறு என்னவாக இருக்க முடியும்?

“தொடாதே! தொடாதே கருவறைகளின் கதவை தொடாதே! கண்காணிப்பு கேமராவை பொருத்தாதே” என்று கோயில் வளாகத்தைச் சுற்றி ஒரு நாள் முழுதும் போராட்டம் நடத்தி கண்காணிப்பு கேமராக்களை நிறுவ முடியாமல் தடுத்து விட்டார்கள். கடந்த வாரம் ஏடுகளில் வந்த செய்திகள் இவை. இந்த அர்த்தநாரீஸ்வரர் கோயிலில் 2017 ஏப்ரல் மாதம் 25 ஆம் தேதி உண்டியல் பணத்தை கோயில் அர்ச்சகரும் அவர் மகனும் திருடியதாக கைது செய்யப்பட்டார்கள். இதைத் தொடர்ந்து எடுக்கப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு என்றால் நாங்கள் திருடுவோம் இது ஆகம் விதி! என்கிறார்களா? அறநிலையத் துறை அதிகாரிகள் நீதிமன்ற உத்தரவுப்படி கண்காணிப்பு கேமராவை நிறுவ வந்ததை தடுத்து நிறுத்துவது சட்டப்படி குற்றம். அதிகாரிகளை பணி செய்யவிடாமல் இவர்கள் தடுத்திருக்கிறார்கள். இதற்காக சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனாலும் ‘பிராமணர்கள்’ வேதபண்டிதர்கள் ஆகமக்காரர்கள் என்ற பாதுகாப்புகள் அவர்கள் மீது சட்டம் பாயாமல் தடுத்துவிட்டது.

கோயில்களை அறநிலையத்துறை இடமிருந்து மீட்க வேண்டும் என்று இப்போது கூப்பாடு போடுகிறார்கள் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கும் போதே இவ்வளவு திருட்டுகள் முறைகேடுகள், பாலியல் குற்றங்கள் நடக்கின்றன. அரசிடமிருந்து மீட்கப்பட்டால் என்னவாகும்?

# மொக்கைப் பேச்சு அமித்ஷா!

அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டு அவசரநிலை பிறப்பிக்கப்பட்ட இந்திராகாந்தியின் காலம் உண்மையில் "இருண்ட காலம்" தான்.

தமிழ்நாட்டில் திக, திமுக மற்றும் மார்க்சிஸ்ட் கட்சியினர் மிசா, ஒடுக்குமுறை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். சென்னை சிறையில் தாக்கப்பட்டனர்.

விடுதலை, முரசொலி, தீக்கதிர் நாளேடுகள் கொடூரமான தணிக்கைக்கு உள்ளாக்கப்பட்டன. அக்ரஹார அதிகாரவர்க்கம் விடுதலை நாளேட்டை ஒவ்வொரு நாளும் தணிக்கை செய்த காலத்தில் நான் ’விடுதலை’யில் பணியாற்றினேன் அடக்குமுறை சூழலை எதிர் கொண்டோம்.

திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளின் இன்றைய நிலைப்பாடும் அது ‘இரண்ட காலம்’ என்பதுதான்.

ஆனால் ‘அமித்ஷாக்கள்’ இப்போது காங்கிரஸ் எதிர்ப்புப் பிரச்சாரத்திற்கு இதைப் பயன்படுத்த தீவிரம் காட்டுகிறார்கள். சொல்லப்போனால் மோடியின் ஆட்சி அறிவிக்கப்படாத அவசரநிலை அடக்குமுறை ஆட்சியாகத் தான் நடந்து கொண்டிருக்கிறது.

மோடியின் ஒற்றை சர்வாதிகாரத்தை நோக்கி நாட்டை இழுத்துச் செல்ல அரசியல் சட்டத்தின் அடிப்படை கட்டமைப்புகளை சீர்குலைத்து கருத்துரிமையைப் பறித்து எதிர்க்கட்சிகளை அழித்து ஒழிக்கும் அனைத்து முறைகேடுகளும் அரங்கேற்றப்பட்டு வருகின்றன.

அவசரநிலை காலத்து காங்கிரஸ் கட்சிதான் இப்போது உள்ள காங்கிரஸ் கட்சியா? நிச்சயமாக இல்லை. அன்றைய காங்கிரஸ் இட ஒதுக்கீடு கொள்கையை எதிர்த்தது! சோனியா தலைமையில் காங்கிரஸ் கட்சி வந்ததற்குப் பிறகு கட்சிக்குள்ளேயே அனைத்து சமூகப் பிரிவினருக்கும் அதிகாரத்தை பகிர்ந்து அளித்தது. ராஜீவ் காந்தி மண்டல் பரிந்துரையை எதிர்த்தார்.

ஆனால் அதே காங்கிரஸ் கட்சி தான் சோனியா தலைமையில் வந்த பிறகு மண்டல் பரிந்துரையின் மற்றொரு முக்கிய பிரிவான கல்வியில் இட ஒதுக்கீட்டு உரிமையை செயல்படுத்தியது.

மாநில உரிமை, மதவாத எதிர்ப்பு, சமூக நீதி என்ற திராவிட இயக்கத்தின் குரலை ராகுல் காந்தி உரத்து முழங்கி வருகிறார். ஆர்.எஸ்.எஸ் மனுவாதத்தை தோலுரிக்கிறார். இந்த பண்பு மாற்றத்தை இயங்கியல் பார்வையில் சிந்திக்கும் அறிவு அமித்க்ஷாவுக்கு கிடையாது.

அதனால்தான் எமர்ஜென்சியைக் கொண்டு வந்த காங்கிரசை திமுக ஆதரிக்கலாமா என்று கேள்வி கேட்கிறார். இப்போது ஊசலாட்டத்தில் தடுமாறும் பாஜக கூட்டணியில் உள்ள அஇஅதிமுக அவசர நிலையை ஆதரித்தது அமித் ஷாவுக்கு தெரியுமா?

ஆதரவு கடிதத்தை இந்திராவிடம் நேரில் சென்று கையளித்தவர் எம்ஜிஆர். மாநிலக் கட்சிகளை தடை செய்யக்கூடும் என்ற அச்சத்தில்தான் அதிமுக பெயரோடு அகில இந்திய என்ற சொற்றொடரையும் ஒட்ட வைத்தார்.

எமர்ஜென்சியை கொண்டு வந்ததற்காக கடற்கரை பொதுக்கூட்ட மேடையில் இந்திரா காந்தியை மன்னிப்பு கேட்க வைத்த பிறகுதான் திமுக, காங்கிரஸ் உடன் கூட்டணி வைத்துக் கொண்டது.

அரசியல் களத்தில் வெவ்வேறு காலகட்டத்தில் வெவ்வேறு முடிவுகள் எடுக்கப்படுகின்றன, கூட்டணிகள் மாறுகின்றன. ஆனால் இந்த மாற்றங்களை சமூக அரசியல் சூழலோடு பொருத்திப் பார்க்க வேண்டும்.

அவசர நிலை காங்கிரஸ் சமூக நீதிக்கு எதிரானது. கருத்துரிமையைப் பறித்து அடக்கு முறையை திணித்தது. அதை எம்ஜிஆரின் அதிமுக ஆதரித்தது. சோனியா, ராகுலின் கால காங்கிரஸ் அதிலிருந்து வேறுபட்டு சமூக நீதியையும் மதச்சார்பின்மையையும் பேசுகிறது.

வேதகால சமஸ்கிருத உளவியலில் புதையுண்டு கிடக்கும் அமித்ஷாக்களிடம் இந்த சமூக அறிவியல் சிந்தனைகளை எதிர்பார்க்க முடியாது. அதிமுக, பாஜக அணிகளுக்காக தொலைக்காட்சிகளில் பேசுவோரும் இப்படி அமித்ஷாக்களைப் போல மொக்கையாகவே பேசுவதை மக்கள் பார்த்து நகைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**– விடுதலை இராசேந்திரன்**
**முகநூல் பதிவு**

# கழக ஏட்டுக்கு நன்கொடை!

கழகத் தோழர் இரண்யா தனது மகன் அகராதி பிறந்தநாளை முன்னிட்டு ரூ.2000 சென்னை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி அவர்களிடம் வழங்கினார். கழகத் தோழர் அஜித் ரூ.1000 கழக ஏட்டுக்கு நன்கொடை வழங்கினார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.

# கடவுளின் இருப்பை உடைக்கும் கேள்விகள்

## கொளத்தூர் நாத்திக விழா சிந்தனை(5)

-விடுதலை இராசேந்திரன்

உலகத்தையே உலுக்கியது அகமதாபாத் விமான விபத்து. பயணித்தவர்களில் ஒருவரைத் தவிர 234 பயணிகளும் மரணமடைந்து விட்டார்கள். கடவுள் இப்படி ஒரு தண்டனையைத் தர வேண்டுமா? என்ற கேள்வியை கடவுள் நம்பிக்கையாளர்கள் எவருமே கேட்கவில்லை. காசாவில் 54,000 அப்பாவி மக்களை இஸ்ரேல் படுகொலை செய்வதை கடவுள் ஏன் நிறுத்தவில்லை என்ற கேள்வியையும் கடவுளை நோக்கி எவரும் கேட்கவில்லை. இஸ்ரேல் ஈரான் மீது குண்டு வீசுகிறது, ஈரான் பதிலளித்திருக்கிறது. அமெரிக்காவும் இஸ்ரேலுக்கு ஆதரவாக குண்டு வீசுகிறது. நாட்டில் அதர்மம் தலை தூக்கும் போதெல்லாம் நான் அவதாரம் எடுத்து வருவேன் என்று கூறிய 'கிருஷ்ண பகவான்' ஏன் வரவில்லை என்று எந்த கீதை பக்தர்களாவது கேட்டார்களா? கேட்கவில்லை.

மாறாக என்ன நடந்தது? விமான விபத்தையும் இஸ்லாமிய எதிர்ப்புக்கு பயன்படுத்தினர். விபத்துக்குள்ளான விமானத்தை இஸ்லாமிய நாடான துருக்கியின் நிறுவனம் ஒன்று பராமரிக்கிறது. எனவே விபத்தில் இஸ்லாமிய சதி இருக்கிறது என்றார் ஒருவர். அவர்தான் சங்கிகளின் ஊது குழலான "ரிபப்ளிக்" தொலைக்காட்சியை நடத்திவரும் கோஸ்வாமி. விபத்துக்குள்ளான விமானத்தை நாங்கள் பராமரிக்கவில்லை நாங்கள் பராமரிக்க ஒப்பந்தம் போட்டிருப்பது போயிங் 777 என்ற வேறு விமானம் என்று துருக்கி நிறுவனம் உடனடியாக மறுத்தது. வாய் மூடினார் கோஸ்வாமி. விமானத்தில் ஜன்னல் ஓரமாக உட்கார்ந்து இருந்த விஸ்வாஸ் குமார் ரமேஷ் என்ற பயணி மட்டும் உயிர் தப்பினார். ஜன்னல் ஓரமாக உட்கார்ந்ததால் ஜன்னல் உடைந்து அவர் கீழே விழுந்தார் அதனால் உயிர் பிழைத்தார். ஆனால் அவர் கழுத்தில் துளசி மாலை அணிந்து இருந்ததால் உயிர் தப்பினார் என்று பொய்களைப் பரப்பினார்கள்; முகநூலில் எழுதினார்கள். உண்மையில் அவர் கழுத்தில் அணிந்திருந்தது துளசி மாலை அல்ல; உலோகத்தால் ஆன சங்கிலி.

கடவுள் கருணையால் உயிர் தப்பினார் என்ற வார்த்தையை மறந்தும் ஊடங்களோ, தலைவர்களோ எவரும் அவருக்குப் பயன்படுத்தவில்லை. அப்படியானால் இறந்தவர்களுக்கு கடவுள் கருணை காட்டவில்லையா? என்ற கேள்வி வரும் என்ற அச்சம் தான் அதற்கு காரணம்.

விமானத்துக்கு வந்து சேர்வதில் தாமதமான ஒரு பெண் கணபதி பாபா என்னை காப்பாற்றினார் என்று கூறினார். கணபதி பாபாவே இந்த விமானத்தில் பயணித்திருந்தால் அவரது கருகிபோனப் உடல் தான் கிடைத்திருக்கும்.

கடவுளின் சக்தியை அறிவியல் கண்டுபிடிப்புகள் கேள்வி கேட்கின்றன. அறிவியல் கண்டுபிடிப்புகள் ஐரோப்பிய நாடுகளில் தான் நடந்தன. ஆன்மீக பூமியாக கூறப்படும் இந்த 'பாரதத்தில்' உடன்கட்டை ஏறுதல், குழந்தைத் திருமணம், தீண்டாமைக் கொடுமை, ஜாதிக் கொடுமை என்பவை தான் கண்டுபிடிக்கப்பட்டன. ஒவ்வொரு விஞ்ஞான கண்டுபிடிப்பும் கடும் எதிர்ப்புகளை சந்தித்தன.

கடைசி நேர உரையாடலையும் கோளாறுகளையும் பதிவு செய்யும் கருப்புப் பெட்டி விமானத்தின் காணொலிகளை பதிவு செய்யும் கருவி டிவிஆர், வீடியோ இவைகள் கிடைக்குமா என்று தீவிரமாக தேடினார்கள். இதோ கிடைத்துவிட்டது, என்று உற்சாகக் குரல் கொடுத்தார் ஒருவர், அவர் பெயர் சாகர் அமீன். கிடைத்தது கருப்பு பெட்டி அல்ல, அது பகவத் கீதை நூல். நூறு டிகிரி வெப்பத்தாலும் பகவத்கீதை மட்டும் எரியாமல் தப்பியது எவ்வளவு பெரிய சக்தி என்று சிலாகித்தார்கள், முகநூலில் எழுதுகிறார்கள். கீதையின் சக்தி ஏன் கீதையை கையில் வைத்திருந்த அந்த பயணியைக் காப்பாற்றவில்லை!

உண்மையில் அந்த கீதை விமானத்தில் தான் இருந்ததா? அந்த காகித நூல் நூறு டிகிரி வெப்பத்திலும் எரியாமல் எப்படி இருந்திருக்கும்? அது எவருடைய பெட்டியில் இருந்தது? விமானம் விழுந்த மருத்துவக் கல்லூரி விடுதியில் இருந்ததா? எவராவது கொண்டு வந்து போட்டார்களா? இந்த கேள்விகளுக்கு எல்லாம் பதில் இல்லை.

கடவுளின் சக்தியை அறிவியல் கண்டுபிடிப்புகள் கேள்வி கேட்கின்றன. அறிவியல் கண்டுபிடிப்புகள் ஐரோப்பிய நாடுகளில் தான் நடந்தன. ஆன்மீக பூமியாக கூறப்படும் இந்த 'பாரதத்தில்' உடன்கட்டை ஏறுதல், குழந்தைத் திருமணம், தீண்டாமைக் கொடுமை, ஜாதிக் கொடுமை என்பவை தான் கண்டுபிடிக்கப்பட்டன. ஒவ்வொரு விஞ்ஞான கண்டுபிடிப்பும் கடும் எதிர்ப்புகளை சந்தித்தன.

அறுவை சிகிச்சையின் போதும், பிரசவத்தின் போதும் அறுவை வலிதெரியாமல் இருப்பதற்காகப் பயன்படும் குளோராஃபார்ம் எனும் மயக்க மருந்தை இங்கிலாந்தைச் சேர்ந்த ஜேம்ஸ் யங் சிம்ஸன் சென்ற நூற்றாண்டில் கண்டு பிடித்தார். இதற்கு திருமறையில் ஆதாரமில்லையே என்று கடுமையாக எதிர்த்தார்கள் பாதிரிமார்கள். 'கஷ்டத்தில் நீ குழந்தை பெறுவாய்' எனும் பைபிளின் வாக்கியத்தைக் கொண்டு தாய்மார்கள் பிரசவத்தின் போது மயக்க மருந்து பயன்படுத்தக் கூடாது அப்போதுதான் தாய்ப்பாசம் இருக்க முடியும் என வற்புறுத்தினார்கள்.

இரத்தத்தை வகைபிரித்து, இரத்த வங்கியில் சேமிக்கப்படும் முறையினால் உலகமெங்கும் பலகோடி மனித உயிர்கள் காப்பாற்றப்படுகின்றது. மனித ரத்தம் பற்றிய ஆய்வை நடத்திய 'குற்றத்திற்காக' செர்வெட்டஸ் எனும் விஞ்ஞானி கழுமரத்தில் ஏற்றி உயிருடன் கொளுத்தப்பட்டார். பரமபிதாவின் புனிதம் காக்க இந்த தண்டனை வழங்கியவர் கால்வின் என்ற புராட்டஸ்டன்ட் பாதிரியார்.

தேவனின் மகிமை கூறி ஆவியெழுப்ப, விமானமேறி உலகைச் சுற்றி சுற்றி வருகிறார்கள் சுவிசேசத்தின் ஊழியர்கள். ஆனால் உலகம் உருண்டையானது, தட்டையானதல்ல, பூமி சூரியனைச் சுற்றிவருகிறது என்று சொன்ன கியார்டனே புருனோவை உயிரோடு கொளுத்தினார்கள் கத்தோலிக்க மத குருமார்கள். 'வானுலகக் கோள்களின் சுழற்சிபற்றிய தனது கண்டுபிடிப்பை 36 ஆண்டுகளுக்கு முன்பே நூலாக எழுதியும், திருச்சபையின் கொலை வெறிக்குப் பயந்துபோன கோப்பர்நிகஸ் இறுதியில் தனது மரணப்படுக்கையில் இருந்து வெளியிட்டார்.

பூமியின் இயக்கத்தையும், சூரியனைச் சுற்றி வருவதையும் கண்டு சொன்ன கலிலீயோ திருச்சபையினால் சித்ரவதை செய்யப்பட்டார். அவரது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இதனால் கலிலீயோ விவிலியத்தின் உலகம் பற்றி உண்மைகளை' ஏற்று தன் கண்டுபிடிப்புகளை மறுக்க வேண்டியிருந்தது. கலிலீயோவின் தொலைநோக்கியை சாத்தானின் கருவி என்றார்கள் கிறித்தவ பாதிரிகள்.

கி.பி. 370-இல் அலெக்சாண்டிரியாவில் (இன்றைய கெய்ரோ நகரம்) அரும்பாடுபட்டு சேர்த்துவைத்த நூலகத்தையும், அருங்காட்சியகத்தையும் ஆர்ச் பிஷப் சிரில் தலைமையிலான பாதிரிப்படை சூறையாடிக் கொளுத்தியது. நூலகத் தலைவரும் பெண் விஞ்ஞானியுமான ஹைப்பேஷியாவை சித்திரவதை செய்து கொளுத்தினார்கள். விஞ்ஞானிகளை வேட்டையாடிய திருச்சபையின் ரத்தக்கறை படிந்த வரலாற்றின் ஒரு சில துளிகள்தான் இவை. அனைத்துலக பாதிரிகளின் எண்ணிக்கையை விட அவர்கள் இழைத்த குற்றங்களின் எண்ணிக்கை அதிகமானதாகும்.

## மகாராஷ்டிராவில் 'மும்மொழி' ரத்தானது

ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கை திட்டத்தின் மூலம், மராட்டிய மாநிலம் முழுவதும் உள்ள மராத்தி மற்றும் ஆங்கில வழிப் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இந்தியைக் கட்டாய 3-வது மொழியாக மாற்றப்படும் என மராட்டிய மாநில அரசு அறிவித்திருந்தது.

இந்தித் திணிப்புக்கு எதிராக மும்பையில் ஜூலை 5ம் தேதி பிரமாண்ட பேரணி நடத்தப்படும் என நவநிர்மாண் சேனா கட்சித் தலைவர் ராஜ் தாக்கரே, காங்கிரஸ், உத்தவ் தாக்கரே சிவசேனா உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கூட்டாக அறிவித்திருந்த நிலையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மராட்டிய முதலமைச்சர் தேவேந்திர பட்னாவிஸ் கூறுகையில், "பள்ளிகளில் மும்மொழிக் கொள்கையை அமல்படுத்துவது தொடர்பான பரிந்துரைகளை வழங்க கல்வியாளர்கள் குழு ஒன்று அமைக்கப்படும். வல்லுநர் குழு அமைத்து, அவர்கள் அளிக்கும் பரிந்துரையின் அடிப்படையில் முடிவு எடுக்கப்படும்" என்றார்.

இது குறித்து உத்தவ் தாக்கரே சிவசேனா கட்சியின் தலைவர் சஞ்சய் ராவத் கூறுகையில், "அரசாணைகள் திரும்பப் பெறப்பட்டது மராத்திய அமைப்புகளின் ஒற்றுமைக்கு கிடைத்த வெற்றி" என்றார்.

## தமிழ்நாட்டு பள்ளிகளில் ஜாதி கயிறுகளுக்குத் தடை!

பள்ளிகளில் ஜாதி அடிப்படையிலான மோதல், சமூக வேறுபாடுகளை ஆகியவற்றை தடுத்து, நல்லிணக்கம், நற்பண்புகள் வளர்க்கும் வகையில், பள்ளிக் கல்வித்துறை முக்கிய வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது. இதுகுறித்து சுற்றறிக்கை அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் வருகை பதிவேட்டில் ஜாதி பெயர் இடம்பெறக் கூடாது. மாணவர்களை வரிசை மாற்றி அமர வைப்பது, ஆசிரியர்கள் ஜாதிப் பெயர் குறிப்பிடக்கூடாது உள்ளிட்ட முக்கிய வழிகாட்டுதல்களை பள்ளிக் கல்வித்துறை வெளியிட்டுள்ளது.

பள்ளிகளில் ஜாதிரீதியான சிந்தனை பள்ளியில் படிக்கும் மாணவர்களிடம் ஜாதிய மற்றும் சமூக வேறுபாடு உணர்வுகள் தோன்றுவதைத் தடுக்க வேண்டிய முக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. கல்வியே அனைத்திற்கும் முக்கியம் என கற்பிக்கப்படும் இடத்தில், ஜாதி மாணவர்களின் மத்தியில் மோதலையும், வெறுப்பு உணர்வைத் தூண்டக்கூடாது என்பதில் பள்ளிக் கல்வித்துறை உறுதியுடன் உள்ளது எனவே, இதுபோன்ற உணர்வுகள் மூலம் ஏற்படும் வன்முறைகள் உருவாகுவதைத் தடுப்பதற்காகவும், மாணவர்களுக்கு நல்லிணக்கம். நற்பண்புகளை குறித்து அறிவுரை வழங்குவது தொடர்பான முயற்சியில் இறங்கியுள்ளது. அதன்படி, பள்ளிகள் பின்பற்ற வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது.

Posted at Egmore RMS, Pathirika Channel,Chennai-08.
date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# ‘இடையாற்றுமங்கல’ புரட்சி!

வரலாற்றுப் பதிவுகள் இல்லாத எத்தனையோ போராட்டங்களை பெரியார் இயக்கம் நடத்தி இருக்கிறது உள்ளூர் மட்டத்தில் நடந்த அந்த சமூகப் புரட்சிகளை வெளிச்சப்படுத்தும் கட்டுரைத் தொடரை முரசொலியில் ர.பிரகாஷ் எழுதி வருகிறார். லால்குடி இடையாற்று மங்கலத்தில் பெரியார் தொண்டர்கள் பண்ணை ஆதிக்கத்தை எதிர்த்த சுருக்கமான வரலாறு. பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

கீழத்தஞ்சையில் மட்டும் திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கத்தில் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்டோர் இருந்தனர். குடந்தையில் அதன் முக்கிய முகங்களில் ஒருவராக இருந்த ஜோசப்பை லால்குடிக்கு அனுப்பினார் பெரியார். ‘விளைச்சலைச் சமமாகப் பங்கிடு’, ‘நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் வழங்கு’ போன்ற முழக்கங்களை விவசாயக் கூலிகள் மனதில் ஆழமாகப் பதியச் செய்தார் ஜோசப். ஊர்வலங்கள், பிரச்சாரங்கள், துண்டறிக்கை விநியோகம் என பெரியார் கொள்கைகளும் சேர்ந்து பரப்பப்பட்டன.

பண்ணையாளர்களோடு தொடர் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர். கொண்டையம்பட்டி செட்டியார் பண்ணை படியாததால், அறுவடையை மொத்தமாக எடுத்துக்கொள்வது என முடிவு செய்தனர். அறுவடைக் களத்தில் திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கத்தி னருக்கும் கொண்டையம்பட்டி செட்டியார் பண்ணை ஏவிய, கொடிக்கால் விவசாயிகளுக்கும் இடையே மோதல் மூண்டது. திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் 12 பேர் துடிதுடிக்க வெட்டிக் கொல்லப்பட்டனர்.

பாப்பம்மாள் பண்ணை, மணக்கால் பண்ணை, தாத்தாச் சாரியார் பண்ணையிலும் மோதல் எதிரொலித்தது. பண்ணைகள் ஒன்றுகூடி, மதுரையில் இருந்து ஆட்களை அழைத்து வந்தனர். அவர்கள் வயலில் இறங்கிய நொடியில் மோதல் வெடித்தது. மோதலில், வெளியூர் தொழி லாளர்கள் 7 பேர் இறந்தனர். அங்குள்ள வாளாடியிலும் பண்ணை ஆதிக்கம் தீவிரமாக இருந்தது. மொத்த ஊரும் பார்ப்பனர்களுடை யது. அதற்கெதிராக அங்கிருந்த திராவிடர் கழகச் செயற்பாட்டாளர் கோவிந்த ராஜ் இயங்கிக் கொண்டிருந்தார். அதன்விளை வாக, விவசாயத் தொழிலாளர்கள் கிடைக்காமல் நேரடியாக, பார்ப்பனர்களே வயலில் இறங்கினர். இந்திய வரலாற்றில் முதன்முதலாக பார்ப்பனர்களே வயலில் இறங்கி, வேலைபார்த்த முதல் சம்பவம் இதுதான்.

மோதல்போக்கின் தொடர்ச்சியாக, விவசாயிகளுக்கு 40%, பண்ணைகளுக்கு 60% என அறுவடையில் பங்கு பிரித்து, அவசரச் சட்டம் இயற்றினார் அன்றைய முதல்வர் ராஜாஜி. 1954-இல் ஆட்சிக்கு வந்த காமராசர் விவசாயிகளுக்கு 60%, நிலவுடமையாளர்களுக்கு 40% என குத்தகைதாரர் சட்டத்தை இயற்றினார். குத்தகைதாரர் சட்டம் மட்டும் போதாது என நிலங்களைப் பகிரும் வேலையை மேற்கொண்டது ‘திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம்’. சமரசத் தீர்வாக அன்றைய ஆட்சியர் மலையப்பனும் இந்நடவடிக்கைகளுக்கு உடன் நின்றார். மலையப்பனைக் கண்டித்து ‘இந்து’ பத்திரிகை தலையங்கமே எழுதியது. ‘இவரைப் போன்றவர் பதவியில் இருப்பதே ஆபத்து’ என நீதிபதி கூறினார். வழக்குத் தொடுத்தவர், அரசு வழக்கறிஞர், நீதிபதி என அனைவருமே பார்ப்பனர்கள்.

அப்போது திருச்சி, காந்தி மார்க்கெட்டில் நடந்த ஒரு கூட்டத்தில், ஆட்சியர் மலையப்பனுக்கு ஆதரவாக பார்ப்பனர்களைக் கண்டித்து ஆவேசமாக உரை யாற்றினார் பெரியார். வாளாடி, உத்தமர்சீலி, கூகூர், மணக்கால் என அனைத்து ஊர்களுமே இடையாற்று மங்க லத்தில் இருந்து 3 முதல் 7 கி.மீ. தொலைவுக்குள் இருப்பவை. ஒரு பண்ணையில் விழுந்த சிறு கீறல், மற்ற பண்ணைகளிலும் விரிசலை ஏற்படுத்தின. அந்த விரிசலைப் பெரும் பிளவாக்கி, பண்ணை ஆதிக்கத்தோடு, ஜாதிய கட்டமைப் பையும் தகர்த்தது திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம். இன்றும் அங்கு எல்லா சமூகங்களும் நிலம் வைத்திருக்கின்றன. அதற்கான வலுவான அடையாளமாக இன்றும் திகழ்கிறது இடையாற்றுமங்கலம்.

## தீவிர களப்பணிக்கு தயராகும் சென்னை மாவட்ட இளைஞரணி

சென்னை கழக தலைமை அலுவலகத்தில் ஜூன் 29 மாலை 5 மணி அளவில் சென்னை மாவட்ட இளைஞரணி மற்றும் தொழில்நுட்ப அணியின் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. இரு அணிகளை சேர்ந்த 40 தோழர்கள் பங்கேற்றனர். சென்னை மாவட்ட இளைஞரணியின் கலந்துரையாடல் கூட்டத்தில், எழுத்தாளர்களை உருவாக்குவது, வாசிப்புப் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளுதல், தோழமை உணர்வை மேம்படுத்துதல், அறிவியல் பிரச்சாரம் உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட்டு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. மாதம் ஒரு புத்தக திறனாய்வு கூட்டத்தை இளைஞரணி முன்னெடுக்கும்.

2. மாதம் இரண்டு தெருமுனை கூட்டங்கள் நடத்துவது

3. ஆண்டுக்கு இரண்டு பொதுக்கூட்டம் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது. முதற்கட்டமாக அம்பத்தூர் பகுதியில் பகுத்தறிவு பரப்புரை பிரச்சாரம் நடத்தலாம் எனவும் முடிவு செய்யப்பட்டது.

தொழில்நுட்ப அணி சார்பில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன. தகவல் தொழிட்நுட்ப் அணி சார்பாக புகைப்படக் கருத்து வடிவ உருவாக்கம், காணொலிப் பிரச்சாரம், இணையதள வடிவமைப்பு, சமூக வலைத்தள செயல்பாடுகள், ஆவணப்படுத்துதல், எண்ணிமப்படுத்தல், ஆங்கில உள்ளடக்கத் தயாரிப்பு, தேதி வாரியாக திராவிடர் இயக்க வரலாற்று நிகழ்வுகளை தொகுத்தல், செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டது.



சென்னை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ப.அருண் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, தென்சென்னை மாவட்ட அமைப்பாளர் ம.கி. எட்வின் பிரபாகரன், வடசென்னை மாவட்ட அமைப்பாளர் தட்சிணாமூர்த்தி, திருவல்லிக்கேணி பகுதித் தலைவர் சு.கோபி, தாம்பரம் நகர அமைப்பாளர் அருண் கோமதி, பிரசாந்த் உள்ளிட்ட பலர் கருத்துகளை பகிர்ந்து கொண்டனர். நிகழ்வில் புதிய தோழர் விஜய்பிரதாபன் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். அவருக்கு கழக வெளியீடுகள் வழங்கப்பட்டன.

## வி.பி சிங் சிலைக்கு கழகம் சார்பில் மாலை அணிவிப்பு!

சமூக நீதிக் காவலர் விபி சிங் பிறந்தநாளான (25/6/25), சென்னை பிரசிடென்சி கல்லூரியில் அமைந்துள்ள அவரது உருவச் சிலைக்கு, மாலை 5 மணியளவில், திவிக தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் தலைமையில் தோழர்கள் மாலை அணிவித்து மரியாதை செய்தார்கள்.



மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, சென்னை மாவட்டத் தலைவர் வேழவேந்தன், தென்சென்னை மாவட்ட அமைப்பாளர் ம.கி. எட்வின் பிரபாகரன், இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் ப.அருண், திருவல்லிக்கேணி பகுதித் தலைவர் கோபிநாத், திருவல்லிக்கேணி பகுதி அமைப்பாளர் த.நா.சூர்யா, தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் இளவரசன் உள்ளிட்ட பல தோழர்கள் பங்கேற்றனர்.

## கருநாடக கழகத் தலைவர் இராவணன் படத்திறப்பு நிகழ்வு!



கருநாடக திவிக மாநிலத் தலைவர் தோழர் இராவணன் அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சி பெங்களூரு ஜெய்பீம் பவன் அரங்கத்தில் நடைபெற்றது.

இதில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்கள் பங்கேற்று தோழர் இராவணன் தொடர்பான நினைவுகளை பகிர்ந்து கொண்டார். மேலும் இந்தியாவில் பௌத்தம் முன்னெடுத்த சமத்துவம் குறித்தும், ஆரியர்கள் படையெடுப்பு பற்றியும், ஆரிய பண்பாட்டு படையெடுப்பால் நாம் இழந்தவற்றை திணிக்கப்பட்ட ஆரிய பண்பாட்டில் இருந்து நாம் மீள்வதற்கு பெரியார் கையாண்ட விழாக்கள் நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்கள் அடங்கிய ஒரு சிறப்பான உரையை நிகழ்த்தினார்.

**முதல் பக்கத் தொடர்ச்சி....**

எனவே ‘வருமுன் காப்போம்’ என்ற எண்ணத்தோடு ஏன் இவ்வாறு செய்யலாகாது எனும் எண்ணத்தோடு கீழ்கண்டவற்றைக் கழகத் தோழர்களின் செயல்பாட்டுக் கெனவும், ஒத்த சிந்தனை கொண்டோரின் பரிசீலனைக்காகவும் முன் வைக்கிறோம். ஆகஸ்ட் முதல் வாரத்தில் ஒத்த கருத்துள்ளோர் கூடி, தேவையெனில் அரசின் விதிமுறைகளை செயல்படுத்தும் நல்ல நோக்கத்தோடு நேரடி தலையீடு செய்யலாமா? செய்யலாம் எனில் எந்த முறைகளில்? என்பது குறித்து விவாதிக்கலாம்.

**பின்குறிப்பு: (கழகத் தோழர்களுக்கு)**

ஆகஸ்ட் 27 தான் பிள்ளையார் ஊர்வலம் என்றாலும், இப்போதிருந்தே நடவடிக்கைகளைத் தொடங்கலாம் எனக் கருதுகிறேன். குறிப்பாக பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ்சில் சிலைகளை உற்பத்தி செய்யும் இடங்களை அடையாளம் கண்டு உடனடியாக *Speed Post* (அ) *Registered Post with Acknowledgement due* வழியாக மாசு கட்டுப்பாடு வாரிய அதிகாரிகளிடம் புகார் செய்யப்பட்டால் உடனடியாக அச்சிலைகளை அவர்களே வந்து எடுத்துச் சென்று விடுவார்கள். இது கடந்த ஆண்டுகளில் பல மாவட்டங்களில் நடந்துள்ளது. அதோடு (கழக முகநூல் பக்கத்தின்) இணைப்பில் பதியப்பட்டுள்ள விண்ணப்பங்களையும் உரிய அதிகாரிகளுக்கு இப்போதே அனுப்பி வைக்கலாம்.

புகார் கடிதங்களை முடிந்தவரை ஒப்புகையுடன் பதிவஞ்சலில் அனுப்புவது நல்லது. குறிப்பாக மாசுக்கட்டுப்பாடு வாரியத்திற்கு அளிக்கப்படும் புகார்களைக் கட்டாயமாக பதிவு அஞ்சலில் ஒப்பகையுடன் அனுப்பிப் பெறுவது நல்லது. அதேபோல அனுப்பப்பட்ட புகார்களின் நகல்களையும், பெற்றுக் கொண்டதற்காக பெறப்படும் ஒப்புகை சீட்டுகளையும் பத்திரமாக வைத்திருப்பதும் கட்டாயம். பின்னர் தேவைப்பட்டால் வழக்கு தொடர்வவதற்கு அவை பயன்படும். விதிமீறல்களோடு செய்யப்படும் ( அதாவது பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ் சிலைகள், இரசாயன வண்ணப்பூச்சுள்ள சிலைகள்) சிலைகளை தொடக்கத்திலேயே அகற்றி விடுவது என்பது ஊர்வலத்தில் அதிக சிலைகள் எடுத்து வருவதைத் தடுக்கும்; குறைக்கும்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP    Posted : July 04, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran